**<u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>**

**OS No**. 133/2013 **Date**: 08.02.2023.

<u>பெயர் சத்யபிரபா (**PW**1 )</u>

<u>2, 3 பிரதிவாதிகள்தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

என்னுடைய தாத்தாவின் பெயர் செங்கோடகவுண்டர். அவருக்கு 8 மகன்கள், ஒரு மகளும் ஆவார். எட்டு மகன்களின் பெயர் தெரியுமா என்றால் தெரியும். எனது தாத்தாவின் வாரிசுகள் 9 பேர்களும் சேர்ந்து சொத்தை பாகத்தை பிரித்து கொண்டனாரா என்றால் ஆமாம். வா.சா.ஆ.10 பாக பிரிவினை பத்திரம் என்னுடைய அப்பா, அவருடைய சகோதர்கள் மற்றும் சகோதரி ஆகியோர்கள் செய்து கொண்ட பத்திரம் என்றால் சரிதான். பாகபிரிவினை பத்திரத்தில் உள்ள சொத்தின் மொத்த விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய அப்பாவிற்கு பிரிந்த பாகத்தின் விஸ்தீரணம் மட்டும் தெரியும். அதேபோல் என் அப்பாவின், சகோதர, சகோதரிகளுக்கு பிரிந்த விஸ்தீரணம் விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய அப்பாவிற்கு E ஷெட்டிலில் உள்ள 4 ஏக்கர் 88 செண்ட் கிடைக்க பெற்றது. மேற்படி சொத்துக்கள் ஒரே சர்வே எண்ணில் உள்ளதா அல்லது வெவ்வேறு சர்வே எண்களில் உள்ளனாவா என்றால் வெவ்வேறு சர்வே எண்களில் உள்ளதாக ஞாபகம் உள்ளது. சர்வே நெம்பர் 204/3, 204/4, 204/7, 204/1 பி அவ்வளவு தான் ஞாபகம் உள்ளது. ஒவ்வொரு சர்வே நெம்பரிலும் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்று தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. 1-ஆம் பிரதிவாதி சுந்தராஜன் என்னுடைய தகப்பனார் என்றால் சரிதான். நான் என்னுடைய அப்பாவின் துாண்டுதலின் பேரில் தான் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் தான் இந்த வழக்கின் விவரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய முதன்மை சாட்சியம் பிரமாண வாக்குமூலத்தில் யார் கூறினார் என்றால் நான் தான் கூறினேன். அது நீண்ட நாள்களாகிவிட்டபடியால் எனக்கு ஞாபகம்இல்லை. ஜெயலட்சுமி என்பவர் என்னுடைய அம்மா என்றால் சரிதான். செல்லப்பன் என்னுடைய பெரியப்பா ஆவார். T.S. ஈஸ்வரி என்னுடைய பெரியம்மா ஆவார். செல்வகுமார், மோகன் என்னுடைய பெரியப்பாவின் மகன்கள் ஆவார்கள். மாலாதி என்னுடைய பெரியப்பாவின் மகள் ஆவார். பாகபிரிவினை பத்திரத்தின்படி சர்வே நெம்பர். 204/3 ல் 3 ஏக்கர் 52 சென்டில் ஒரு ஏக்கர் 32 சென்ட் என்னுடைய தகப்பனாருக்கு பிரிந்தது என்றால் சரிதான். அதேபோல் என்னுடைய பெரியப்பா செல்லப்பனுக்கு 2 ஏக்கர் 20 சென்ட் பிரிந்தது என்றால் அது பற்றி தெரியாது. 27.05.1987-ல் என்னுடைய தாயார்

ஜெயலட்சுமி அம்மாள் என்னுடைய பெரியப்பா செல்லப்பன், பெரியப்பா மனைவி ஈஸ்வரி மற்றும் அவருடைய மகனிடமிருந்து 2 ஏக்கர் 92 சென்டை கிரையம் பெற்றார் என்றால் சரிதான். 1- ஆம் வாதி தற்போது அமொரிக்காவில் வசித்து வருகிறார். நான் தற்போது கோவை கீழமேட்டில் வசித்து வருகிறேன். என்னுடைய அப்பா கோவை சரவணபட்டியில் வசித்து வருகிறார். எனக்கு 2010- ஆம் வருடம் திருமணம் நடைபெற்றது. எனக்கு திருமணம் நடைபெற்றபோது நாங்கள் கோவை மருதமலை உள்ள IO காலனியில் வசித்து வந்தோம். என்னுடைய திருமணம் பெற்றோர்களால் ஏற்படு செய்யப்பட்ட நடத்தப்பட்டது ஆகும். என்னுடைய கணவர் திருமணத்தின் போது வங்கியில் பணிபுரிந்து வந்தார். தற்போது வியாபாரம் செய்து வருகிறார்.

(2,3 பிரதிவாதிகளின் வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)